பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 177

வெள்ளிக்கிழமை
23 மே 2025

வைகாசி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



## உப்பை அரசியலாக்காதீர்கள் விரைவில் தட்டுப்பாடு நீங்கும்

### அமைச்சர் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

கொழும்பு, மே 23
பிரபாகரனின் உப்பு, வடக்கு உப்பு, தெற்கு உப்பு என உப்பில் வகைப்பாடுகள் இல்லை. எனவே, உப்பை வைத்து அரசியல் செய்யவேண்டாம் என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆனையிறவு உப்பளத்தில் சிலர் போராட்டம் நடத்தினார்கள். வடக்கில் உள்ள உப்பை தெற்குக்கு

11

### அனலைதீவில் தாக்குதல்களை மேற்கொண்ட

## கனேடிய பிரதான சூத்திரதாரிக்கு நீதிமன்றால் திறந்த பிடியாணை!

### ஊர்காவற்றுறை நீதிமன்றம் அதிரடி

யாழ்ப்பாணம், மே. 23
யாழ்ப்பாணம் அனலைதீவில் தங்கியிருந்த கனேடியத் தம்பதியர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி, பெருந்தொகைப் பணம் கொள்ளையிட்ட வழக்கில், கனடாவைச் சேர்ந்த பிறிதொரு நபருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2023ஆம்

11

## நட்ட நடுவீதியில் வைத்து யுவதியொருவர் கடத்தல்

### இளவாலையில் பரபரப்பு
### தீவிர தேடுதலில் பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 23
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் (இளவாலைச் சந்திக்கு அருகாக) யுவதியொருவர் கடத்தப்பட்டுள்ளார். அவரை மீட்பதற்காக தீவிர தேடுதலில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

11

# இனப்படுகொலைகள் இடம்பெற்றமை உறுதி

### சிறிதுங்க ஜயசூரிய 'உதயனுக்குத்' தெரிவிப்பு
### அரசாங்கத்துக்கு எதிராகக் கடும் காட்டம்

கொழும்பு, மே 23
இலங்கையில் இனப்படுகொலை நடந்துள்ளது. இதில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை. இவ்வாறிருக்கையில், இனப்படுகொலை இடம்பெறவில்லை என தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறுவதானது அவர்களின் இனவாத முகத்தையே வெளிப்படுத்துகின்றது என்று ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

11

## மயங்கிச் சரிந்து யுவதி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 23
யுவதியொருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். மல்லாகத்தைச் சேர்ந்த சந்திரராசா விதுஜாம்பாள் (வயது-21) என்ற யுவதியே

11

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 23
சாவகச்சேரியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார். வைத்திலிங்கம் சிவராஜன்

11



## கொழும்பு மாநகரை கைப்பற்றி விட்டோம்

### அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் சொல்கிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, மே 23
கொழும்பு மாநகரசபையில் நாம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டோம். இது தொடர்பில் அதிகாரபூர்வ அறிவிப்பை மாத்திரமே வெளியிடவேண்டியுள்ளது என்று அமைச்சர் லால்காந்த தெரிவித்தார்.
கொழும்பு மாநகரசபையில் எதிரணியே ஆட்சியமைக்கும் எனக் கூறப்பட்டுவரும் நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பை நேற்று விடுத்துள்ளார்.

11

## கொழும்பு மாநகரில் எமது கொடி பறக்கும்

### ஐக்கிய மக்கள் சக்தி உறுதி

கொழும்பு, மே 23
கொழும்பு மாநகரசபையின் ஆட்சியை அரசாங்கத்துக்கு வழங்கப்போவதில்லை. எதிரணிகளின் ஒத்துழைப்புடன் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியே மலரும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

11



## பொருளாதாரப் பிரச்சினைகளால் திணறுகின்றது அநுர அரசாங்கம்!

### மனோகணேசன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 23
நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் எந்தத் தீர்வும் இல்லை. அரசாங்கம் திணறி வருகின்றமையை வெளிப்படையாக அவதானிக்க முடிகின்றது

11

### முச்சந்தி முரளி

'உவையள் அநுர அலை அடிச்சதாலதான் கடலில இருந்த உப்பெல்லாம் கரைஞ்சிட்டு எண்டு கதைவிட்டாலும் விடுவினம் பாருங்கோ'

### கதிர்காமக் கந்தன் யாத்திரை

## காட்டுப்பாதை ஜூன் 20 திறப்பு

கொழும்பு, மே 23
வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழாவை முன்னிட்டு,

11



## கடற்படையினர் வைத்த தீ; சாம்பரானது மீனவரின் வாடி

### வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 23
முல்லைத்தீவு - செல்வபுரம் பகுதியில், கடற்படையால் கொட்டப்பட்ட குப்பைக்கு வைத்த தீ, விரைவாகப் பரவி மீனவர் ஒருவரின் வாடியையும், பல பனை மரங்களையும் எரித்துச் சாம்பராக்கியுள்ளது.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி சீட்டிழுப்பு இலக்கம் | 22.05.2025 / 4079 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 47 55 72 75 |
| விசேட எழுத்து | C |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி சீட்டிழுப்பு இலக்கம் | 22.05.2025 / 1146 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 24 29 37 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி சீட்டிழுப்பு இலக்கம் | 22.05.2025 / 0105 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 2 9 4 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி சீட்டிழுப்பு இலக்கம் | 22.05.2025 / 2185 |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 06 43 51 56 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி சீட்டிழுப்பு இலக்கம் | 22.05.2025 / 5837 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 6 8 5 7 8 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி சீட்டிழுப்பு இலக்கம் | 22.05.2025 / 1867 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 11 32 47 76 |
| விசேட எழுத்து | G |

| அத சம்பத | |
|---|---|
| திகதி சீட்டிழுப்பு இலக்கம் | 22.05.2025 / 0412 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 5 7 8 7 |

# முள்ளிவாய்க்கால் அஞ்சலியை முடக்கினால் சிக்கல் தோன்றும்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

**கொழும்பு, மே 23**

**முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களை நினைவுகூருவதற்கு அரசு வழிவிட வேண்டும். அதை முடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் பிரச்சினை மேலும் மேலும் அதிகரிக்கும் என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேர்தல் முறைமையை மாற்றாமல் நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு ஜனாதிபதி முடிவெடுத்தால் அதற்கு நாங்கள் ஆதரவு வழங்கத் தயார். 5 இலட்சம் வாக்குகளை எடுத்த ஒரு கட்சி இன்று 69 இலட்சம் வாக்குகளை எடுத்து ஆட்சி அமைத்துள்ளது. ஆனால் அதைக்கொண்டு ஆடத்தொடங்கினால் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும்.

13ஆம் திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற பெரிய குறைபாடாக நாம் காண்பது ஆளுநர்களுக்கு இருக்கின்ற நிறைவேற்று அதிகாரம்தான். மாகாணசபைகளின் அரசாங்கத்தின் கீழேயே ஆளுநர்கள் செயற்படவேண்டும்.

அரசியல் தீர்வின் ஊடாக வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களது பிரச்சினைகள் மாத்திரமன்றி முஸ்லிம்களது பிரச்சினைகளும் தீர்க்கப்படவேண்டும். கனடா போன்ற இடங்களில் புலிகளுக்கு மீண்டும் உயிர்கொடுக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றபோது நாம் அதிகம் குழப்பமடையாமல், இங்கு போரால் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் உரிமையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதை முடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் மேலும் மேலும் பிரச்சினைகள் உருவாகும் - என்றார். (எ-75)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 22.05.2025 | வியாழக்கிழமை | 0545 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| A | 2 2 7 7 5 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 22.05.2025 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2811 | R | 09 33 38 40 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 22.05.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 05 42 72 73 | 4972 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 22.05.2025 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0687 | 02 16 30 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 22.05.2025 | வியாழக்கிழமை | |
| துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♎ | 03 28 36 58 | 4523 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 22.05.2025 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| M | 23 | 15 36 43 70 | 1987 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 22.05.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| I | 07 34 54 71 | 2637 |

## கெஹலியவின் மகனுக்கு விளக்கமறியல்

கொழும்பு, மே 23

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகன் ரமித் ரம்புக்வெல, இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழுவால் கைதுசெய்யப்பட்டு கொழும்பு நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவர் அமைச்சின் நிதியிலிருந்து சுமார் 8 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## உப்புத் தட்டுப்பாட்டுக்கு இந்த வாரத்துக்குள் தீர்வு

கொழும்பு, மே 23



காலநிலைச் சீர்கேட்டால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. போதுமான அளவு உப்பு இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது. உப்புத் தட்டுப்பாட்டுக்கு இந்தவாரத்துடன் தீர்வு எட்டப்படும். அதனால் அரசியல் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் பிறிதொரு விடயத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரிசி விநியோகத்தில் திட்டமிட்டவகையில் நெருக்கடியை ஏற்படுத்த ஒரு தரப்பினர் மீண்டும் முயற்சிக்கிறார்கள். அரிசி மாபியாக்களை நிச்சயம் இல்லாதொழிப்போம். இந்தமுறை பெரும்போக விவசாய விளைச்சலின் பின்னர் அரிசி மாபியாக்களுக்கு முடிவு கட்டப்படும். உப்புத் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் பற்றிப் பேசப்படுகிறது. கடந்த ஆறு மாத காலப்பகுதிகளில் நாட்டில் நிலவிய அசாதாரண காலநிலையால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. இந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு தற்காலிக தீர்மானமாக உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது-என்றார். (எ-இ)

## பொது மனுக்குழுவுக்கு 600 முறைப்பாடுகள்

கொழும்பு, மே 23




புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் இலங்கை நாடாளுமன்றத்தின் பொது மனுக்குழுவுக்குச் சுமார் 600 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இலங்கைப் பொது மனு ஆணைக்குழு பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பரிந்துரையுடன் முறைப்பாடுகளை ஏற்று சபாநாயகரின் அனுமதியுடன் சம்பந்தப்பட்ட திணைக் களங்கள் மற்றும் பொறுப்புவாய்ந்தவர்களிடம் முறைப்பாடுகள் தொடர்பில் விளக்கம் கோரி எதிர்த் தரப்பினருக்கும் விளக்கம்கோரப்பட்டு பின்னர் இருதரப்பினருக்கும் இடையில் விசாரணைகள் சமநேரத்தில் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தவேண்டிய தீர்வு நாடாளுமன்றத்தால் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு அறிவுறுத்தப்படவுள்ளது.

இதனடிப்படையிலேயே 600 முறைப்பாடுகள் நாடாளுமன்ற பொது மனுக் குழுவுக்குக் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-125)

## நல்லூரின் புனிதத்தைப் பாதுகாக்க தமிழ் சைவப் பேரவை உருவாக்கம்

சைவ அமைப்புகள் இணைந்த கட்டமைப்பாக தமிழ் சைவப் பேரவையாக நல்லூரின் புனிதத்தை பாதுகாப்பதற்கான தொடர் போராட்டங்களையும் முயற்சிகளையும் முன்னெடுப்பது என்று நல்லை சிவகுரு ஆதீனத்தில் சைவ அமைப்புகளின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார், நல்லை சிவகுரு ஆதீனம் வேலன் சுவாமிகள் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக வடக்கு, கிழக்கு உள்ளிட்ட இலங்கை தழுவிய ரீதியில் சைவ அமைப்புகள் சைவ திருக் கோவில் பிரதிநிதிகளின் சம்மதத்தைப் பெற்று அனைவரது கோரிக்கையாக நல்லூர் சிவ புண்ணியபூமியில் சட்டவிரோதமாக திறக்கப்பட்டுள்ள அசைவ பன்னாட்டு நிறுவன உணவகத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஆளுநரை இந்தவாரம் சந்தித்து மனுக் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்ச் சைவப் பேரவை தெரிவித்துள்ளது. (எ-123,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய, கலாசாரப் பாரம்பரியத்தை காப்பதில் அரசு அர்ப்பணிப்பு!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 23**

**சமய மற்றும் கலாசாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது. எமது சமூகத்தின் தார்மீக மற்றும் ஆன்மீக நல்வாழ்வுக்கு அவை அவசியமாகும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

அலரிமாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்- இன்றைய துரித தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆன்மீகப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கு ஒரு சவாலாக விளங்குகின்றன. மனித இருப்பின் ஒவ்வொரு பரிமாணமும், அது சமூகமாகவோ, அரசியல் ரீதியாகவோ, பொருளாதாரமாகவோ அல்லது நெறிமுறையாகவோ இருந்தாலும், வாழ்க்கையின் வணிகங்களைச் சீராகப் பரிவர்த்தனை செய்வதற்கு வழிகாட்டும் கொள்கைகளின் தொகுப்பு தேவை. அந்த வகையில் சமயம்சார் திட்டங்களை ஆதரிப்பதற்கும் சமய மற்றும் கலாசாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது - என்றார். (ச-26)

# குறிகாட்டுவான் இறங்குதுறை; நீரடிப் பரிசோதனைகள் நிறைவு

யாழ்ப்பாணம், மே 23

குறிகாட்டுவான் இறங்குதுறையை புனரமைப்புச் செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நீருக்குக் கீழான மதிப்பீட்டு நடவடிக்கைகளை நிறைவுறுத்தியுள்ளது. குறிகாட்டுவான் இறங்குதுறை 500 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் புனரமைப்புச் செய்யப்படும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் சூம் செயலியினூடாக இடம்பெற்ற கடந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட குழு விஜயம் ஒன்றை மேற்கொண்டு இறங்குறையைப் பார்வையிட்டது. இந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை நீருக்குக் கீழான மதிப்பீடுகளை மேற்கொண்டு அறிக்கையை தலைமை அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளது. இதேவேளை இதுவரை குறித்த திட்டத்துக்கு நிதியொதுக்கப்படவில்லை எனவும் குறித்த திட்டம் தொடர்பில் சமர்ப்பிப்புகளைச் செய்து நிதியைப் பெறவேண்டிய சூழல் உள்ளதாகவும் அதிகாரசபை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (ச-125)

# இலஞ்சக் குற்றச்சாட்டு; பொலிஸீக்கு மறியல்

வவுனியா, மே 23

இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பூவரசங்குளம் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரியை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில்வைக்க வவுனியா நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி ஐந்து இலட்சம் ரூபாய் இலஞ்சம்பெற முற்பட்டபோது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்யப்பட்டிருந்தார். கொழும்பில் இருந்து வருகைதந்த இலஞ்சஊழல்ஆணைக்குழுவின் அதிகாரிகளால் குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-110)


# ரூபவாஹினி பணிப்பாளர்களை வெளியேற்றிய ஊழியர்கள்

கொழும்பு, மே 23

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் மனோஜ் நடேஷன அமரசிங்க, பிரதிப்பணிப்பாளர் நாயகம் தனுஜா ஆரியரத்ன ஆகியோர் ஊழியர்களால் அலுவலக வளாகத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஊழியர்களை அடிக்கடி திட்டுவது மற்றும் அவர்களை இழிவுபடுத்துவது உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பாக ஊழியர்கள் ஆரியரத்னவுடன் பல வாக்குவாதங்களில் ஈடுபட்டுவந்துள்ளனர்.

இதனால் கோபமடைந்த ஊழியர்கள் கலந்துரையாடலொன்றுக்கு ஏற்பாடுசெய்திருந்தனர். கலந்துரையாடலின்போது வாக்குவாதம் முற்றிய நிலையில் ஊழியர்கள் பணிப்பாளர் நாயகத்தையும் பிரதி பணிப்பாளர் நாயகத்தையும் அலுவலக வளாகத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றியுள்ளனர். (ச-41-6)



# 101 கிலோ ஹெரோய்னுடன் இருவர் கைது

வீரகெட்டியப் பகுதியில் 101 கிலோகிராம் போதைப் பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வீட்டினுள் வைத்து 101 கிலோகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை பொதிசெய்துகொண்டிருந்த வேளை அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ச-இ)

# போதை மாத்திரைகளுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 23

போதை மாத்திரைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சங்கானையில் இளைஞர் ஒருவர் மானிப்பாய்ப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இளைஞர் ஒருவரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து ஆறு போதைமாத்திரைகளைக் கைப்பற்றினர்.

சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)




**வா**லை விட்டிட்டு நூலைப் பிடிக்கிற கதை மாதிரி , நல்லூர்க்கோயிலுக்கு முன்னால மச்சச் சாப்பாட்டுக்கடையைப் போடவிட்டிட்டு ஒப்புக்குச் சப்பாணியா, நேற்றைக்கு கடையின்ர பேர்ப் பலகையை தூக்கியிருக்குது மாநகரசபை. இப்ப அங்க மச்சக்கடை போட்டதைவிட, இப்பிடியொரு பெரியகடை கண்ணுக்கு முன்னால எழும்பினதை உந்த மாநகரசபைக்காரர் ஏன் கண்டுகொள்ளாமல் இருந்தவை எண்டதுதான் பெரும் கேள்வியாக் கிடக்குது. தங்கட ஏரியாவுக்குள்ள எங்க ஒரு சின்னக் கொட்டில் போட்டாலும் உடனை மணந்துபிடிச்சுப் போய் அதைக் கட்டவிடாமல் தடுக்கிற வல்லமைகொண்ட யாழ்ப்பாணம் மாநகரசபைக்காரர், இப்பிடி தங்கட ஒப்பீஸுக்கு எதிரில, நெத்திக்கு முன்னால வீடுகட்ட வாங்கின பெர்மிசனை வைச்சுக்கொண்டு, ஒரு பெரிய சாப்பாட்டுக்கடையையே கட்டிமுடிக்கும்வரை என்ன செய்துகொண்டிருந்தவை எண்டு ஒருத்தருக்கும் விளங்கேலை.

கட்டடம் ஒண்டைக் கட்டிறதுக்கு அனுமதி குடுத்தால், அந்தக் கட்டடம் தாங்கள் குடுத்த அனுமதிப்படிதான் கட்டிமுடிச்சிருக்கோ எண்டு பார்த்து, அதை உறுதிப்படுத்தி 'சி.ஓ.சி' எண்ட சான்றிதழைக் குடுக்கிற பொறுப்பு மாநகரசபைக்கு இருக்கு. ஆனால் அதையெல்லாம் இவையள் செய்யவேயில்லைப் போல. அப்பிடிச் செய்திருந்தால் வீட்டுக்கு எண்டு எடுத்த பிளானை மாத்தி, கடையா கட்டின விசயம் அப்பவே தெரிஞ்சிருக்கும். சரி, அதைத்தான் ஏதோ அலட்சியமா விட்டிட்டினம் எண்டால், அங்க சாப்பாட்டுக்கடை போட்ட பிறகும் கூட ஒரு பி.எச்.ஐ.மாரும் எட்டியும் பாக்கேலை எண்டால் சனத்துக்கு டவுட் வரத்தானே செய்யும். கச்சான் விக்கிற இடத்தில லேசா காத்தடிச்சாலே உடனை ஓடிவந்து "இப்பிடி காத்தில இருக்கிற கிருமி கச்சான் கோதில தொத்தி, மனுசருக்கு பரவிடும்" எண்டு பொலித்தீனால அந்தக் கச்சானை மூட வைக்கிற அளவுக்கு தங்கட கடமையில கடும் இறுக்கமா இருக்கிற பி.எச்.ஐ. மாருக்கு உந்த மச்சக்கடை திறந்ததுமட்டும் தெரியேலை எண்டாப் பாருங்கோவன்.

ஏழைபாழையளின்ர சாப்பாட்டுக்கடையளுக்க போய் மாபிளைப் போடு, மயிர் விழாமல் தொப்பி போடு எண்டு விண்ணானம் கதைச்சு, சீல் வைச்சு வழக்குப் போடுற பி.எச்.ஐ.மார் இந்தக் கடை விசயத்தில கடும்பயபக்தியோட எட்டவா நிக்கினம். முந்தநாள் உந்தக் கடை பற்றின வழக்கு கோர்ட்ஸில நடக்கேக்ககூட, மாநகரசபையில இருந்து முக்கியமான ஆக்கள் போகேலே. ஒரு பி.எச்.ஐ.யை மட்டும் அனுப்பிப்போட்டு இருந்திட்டினம். அதால அந்தக் கடை விசயத்தில என்ன நடந்தது எண்டு சரியா அவர் சொல்லேலையாம். அதால அந்தச் சாப்பாட்டுக் கடையில வேலைசெய்யிறவையை தொற்று நீக்கம் செய்து, மெடிக்கல் ரிப்போர்ட் செய்துபோட்டு யாவாரம் செய்யலாம் எண்டு கோர்ட்ஸ் சொல்லியிருக்காம். ஒரு சின்னக்கடையில பிரச்சினை எண்டால் அதுக்கு சீல் வைக்கிற மாநகரசபை ஏன் இந்தக் கடை வழக்கு நடக்கேக்க சீல் வைக்கேலை. எல்லாமே மர்மமாத்தான் இருக்குது. திரை மறைவில என்னென்ன நடந்திச்சோ? எவ்வளவு தொகை கைமாறிச்சுதோ? எல்லாம் நல்லூர்க் கந்தனுக்குத்தான் வெளிச்சம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

# கேதீஸ்வரன் கௌரி

## (வரன் ஸ்ரோர்ஸ், வரன் வெற்றிலை கடை உரிமையாளரின் மனைவி)



**பிறப்பு**
**25. 03. 1970**

**இறப்பு**
**21. 05. 2025**

பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கேதீஸ்வரன் கௌரி அவர்கள் கடந்த (21.05.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கேதீஸ்வரனின் (வரன் ஸ்ரோர்ஸ், வரன் வெற்றிலை கடை உரிமையாளர் யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், அன்னார் காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் வேணுகாணன், தேனுகா, தேனுசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆனந்தபாஸ்கரன் (கனடா), அன்புமலர் (பிரான்ஸ்), சுமதி (சுவிஸ்), நிஷாந்தன் (சுவிஸ்), மல்லிகா ஆகியோரின் சகோதரியும் ஜெகதீஸ்வரன் (அமெரிக்கா), ஜெயகதீஸ்வரி, விக்னேஸ்வரன், காலஞ்சென்ற விக்னேஸ்வரி, குகனேஸ்வரன் (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (லண்டன்), மோகனேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.05.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பத்தானை வீதி,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 905 0188**

(C53230) D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

## பழைய பாதையிலேயே புதிய அரசும்...!

இனப்படுகொலை என்ற சொல்லைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கின்றார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத். நாட்டின் பொறுப்புமிக்க பதவியில் இருந்து அவர் வெளியிட்டிருக்கும் இந்தக் கருத்து, கடந்தகால ஆட்சியாளர்கள் சிறுபான்மைத் தமிழ் மக்கள் விடயத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டுக்கும், தற்போதைய அரசாங்கம் சிறுபான்மைத் தமிழ் மக்கள் விடயத்தில் கொண்டிருக்கும் நிலைப்பாட்டுக்கும் எந்தவொரு வித்தியாசமும் இல்லை என்றே கொள்ளவேண்டியிருக்கின்றது.

கடந்தகால ஆட்சியாளர்களிடம் இருந்து மாறுபட்டவர்கள் என்று கூறியே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களின்ஆதரவைக் கோரியிருந்தது. ஆட்சி அதிகாரத்துக்கு வரமுன்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு காணப்படும் என்று வாக்குறுதியளித்திருந்தது. ஆனால் மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சி அதிகாரத்துக்கு வந்தபின்னர் தனது நிலைப்பாடுகளில் இந்த அரசாங்கம் தடுமாற்றத்தைக் காண்பித்துவருகின்றது. தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளுக்கான தீர்வுகளில் தேசிய மக்கள் சக்தியின் இந்தத் தடுமாற்றப் போக்கு, தமிழ் மக்களிடையே நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், அரசாங்கத்தின் முக்கியமான பொறுப்புகளில் இருப்போரின் கருத்துகள் அந்த நம்பிக்கையீனத்தை இன்னும் வலுப்படுத்தும் விதமாகவே இருக்கின்றன.

நீண்டகால உள்நாட்டுப் போருக்குப் பின்னர், நாட்டில் அமைதியும்நல்லிணக்கமும் ஏற்படுதற்கு கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும், குற்றங்களுக் கும் நீதி வழங்கப்படுவதும், குற்றமிழைத்தவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படுவதும் அவசியம். ஆனால் கடந்தகால ஆட்சியாளர்கள் அதைச்செய்யத் தவறியதுடன், குற்றமிழைத்தவர்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகளையே முன்னெடுத்தனர். இலங்கையில் நடந்த போரில் போர்க் குற்றங்களோ, மனித குலத்துக்கு எதிரான குற்றங்களோ சிறிதளவேனும் நடக்கவில்லை என்று சாதித்த கடந்தகால ஆட்சியாளர்கள், தமிழ் மக்களின் நீதிக்கான கோரிக்கைகளை உதாசீனப்படுத்தியே வந்தனர். கடந்தகால ஆட்சியாளர்களின் இந்தப் போக்கே நீதிக்கான உள்நாட்டுப் பொறிமுறை மீதான நம்பிக்கையைத் தமிழ் மக்கள் இழப்பதற்கும், கடந்தகால ஆட்சியாளர்களின் மீது நம்பிக்கையிழப்பதற்கும் பிரதான காரணமாகவிருந்தது.

கடந்தகால ஆட்சியாளர்களில் இருந்து மாறுப்பட்டவர்கள் என்று கூறிக்கொள்ளும் தேசிய மக்கள் சக்தியும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் விடயத்தில் கடந்தகால ஆட்சியாளர்களின் வழியிலேயே செல்கின்றதா என்ற சந்தேகம் இப்போது எழ ஆரம்பித்திருக்கின்றது. புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும், போர்க்குற்றங்கள் உட்பட கடந்தகாலக் குற்றங்களுடன் தொடர்புடையவர்களைப் பொறுப்புக் கூறலுக்குட்படுத்தவும் நாட்டில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தவும் தமக்குக் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை தேசிய மக்கள் சக்தி தவறவிடுகின்றது என்றே கொள்ளவேண்டியிருக்கின்றது. இனவாதத்தையும், மேலாதிக்க சிந்தனையையும் மக்கள் மத்தியில் விதைத்து, பெரும்பான்மையின இனவாதிகளைத் திருப்திப்படுத்தி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொண்ட கடந்தகால அரசியல் தலைமைகளின் தவறான வழியில் தேசிய மக்கள் சக்தியும் பயணிக்குமாக இருந்தால் நாடு மீண்டும் பின்னோக்கியே நகரும்.


இனப்படுகொலை என்ற சொல்லைப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, இறுதிப் போரில் நடந்த குற்றங்கள் தொடர்பான விசாரணைப் பொறிமுறைநோக்கி அரசாங்கம் நகரவேண்டும். அதுவே நாட்டின் எதிர்காலத்துக்கும், இனங்களிடையிலான நல்லிணக்கத்துக்கும் மிக முக்கியமானதாகும். குறுகிய அரசியல் நோக்கங்களுக்கான இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளாமல் அரசாங்கம் செயற்பட்டால் நாட்டின் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை நிச்சயம் இழக்கவேண்டியிருக்கும். எவரையும் திருப்திப்படுத்த முயலாமல் நாட்டுக்கு அவசியமான - நாட்டின் முன்னேற்றத்துக்குத் தேவையான நகர்வுகளை அரசாங்கம் முன்னெடுத்தால் மட்டுமே மக்களின் ஆதரவு தொடரும் என்பதை இந்த அரசாங்கம் நினைவில் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

ஒன்றுக்கும் பயனற்றவர் என்று தள்ளிவிடும்படியாக எவரும் இல்லை. சமயம் வரும்போது வேறு ஏதாவது ஒருவகையில் எவரும் பயன்படக்கூடும்.

– ஹென்றி போர்ட் –




## செயற்கை நுண்ணறிவுச் சட்ட திட்ட வரைவு இரு மாதங்களில்

கொழும்பு, மே 23

செயற்கை நுண்ணறிவு சட்டத்துக்கான திட்ட வரைபு அடுத்து இரண்டு அல்லது மூன்று மாதங்களில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுள்ளது என செயற்கை நுண்ணறிவு ஆலோசனைக் குழுவின் தலைவர் கலாநிதி ரொமேஷ் ரணவன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றநிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டில் வேகமாக வளர்ந்துவரும் செயற்கை நுண்ணறிவு தெளிவான ஒழுங்குமுறைக் கட்டமைப்பை நிறுவுவதற்கான முன்னோடித் திட்டமாக இந்த நடவடிக்கை உள்ளது. சில அம்சங்கள் தற்போதுள்ள சட்டங்களால் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள இடைவெளிகளைக் குறைப்பதே செயற்கை நுண்ணறிவுச் சட்டத்தின் நோக்கம். இந்த சட்ட திட்டவரைவு முயற்சி இலங்கையின் பரந்த தேசிய செயற்கை நுண்ணறிவு மூலோபாயத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். இது தனியார் துறை, அரச மற்றும் உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் போன்ற சர்வதேச அமைப்புகளை உள்ளடக்கிய ஒரு கூட்டு முயற்சியாகும்-என்றார். (எ-இ)

## நீதிபதி மிரட்டல்; சட்டத்தரணி கைது!

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவருக்குப் பாலியல் ரீதியாக துன்புறுத்தி மிரட்டல் விடுத்த குற்றச்சாட்டியில் சட்டத்தரணி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளாரென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார். (ச-இ)



## இலவசக்கல்வியை உறுதிப்படுத்துங்கள்

### ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்து

கொழும்பு, மே 23

இலவசக்கல்வியை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர்ஜோசப்ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் மாணவர்களிடமிருந்து பல வகையான கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. இதனால் பெற்றோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சில பாடசாலைகளின் நிலையான வைப்புக்கணக்கில் பெருந்தொகைப்பணம் காணப்படுகிறது. அப்படியானால் மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் பணம் எங்கு செல்கிறது என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (ச-33-6)

## 4600 மருத்துவ நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றம்

### நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

கொழும்பு, மே 23

2022 - 2025 காலப்பகுதியில் 4600 இற்கும் மேற்பட்ட மருத்துவசேவை உத்தியோகத்தர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனரென சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். தற்போது ஜெனீவாவில் இடம்பெற்றுவரும் உலக சுகாதார மகாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 726 விசேட மருத்துவ நிபுணர்களும், 1116 மருத்துவர்களும், 2800 தாதியர்களும் குறித்த காலப்பகுதியில் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனரெனவும் தெரிவித்துள்ள அமைச்சர் இதனால் இலங்கையின் சுகாதாரத்துறை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாவும் தெரிவித்துள்ளார். (ச-33-6)




## இலஞ்சம் கோருகிறது மதுவரித்திணைக்களம்

### மதுபான விற்பனையாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 23

மதுவரித்திணைக்கள அதிகாரிகள் சிலர் இலஞ்சம் கோரி தம்மைத் துன்புறுத்துவதாக, அனுமதிபெற்ற மதுபான விற்பனையாளர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

அனுமதிபெற்ற மதுபான விற்பனையாளர் சங்கம் மதுவரித்திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுதிய கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தொகைப்பணத்தை இலஞ்சமாக வழங்குபவர்களிடமும் சிறு குற்றங்களுக்காக பெருந்தொகைப்பணத்தை மதுவரித்திணைக்கள அதிகாரிகள் கோருகின்றனர் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தின் பிரதிகள் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ச-41-6)

நாளை சனிக்கிழமை- வைகாசி 10
24.05.2025
சுபநேரம் : 05.52- 07.22
ராகுகாலம் : 10.22 - 11.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளையும் வீண் அலைச்சலையும் தவிர்ப்பது மிக அவசியம். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டியிருக்கும். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண்செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** செலவுகளை சமாளிக்கத் தேவையான பணம் கைக்குவரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நண்பர்கள் தொடர்புகொண்டு மகிழ்ச்சிதரும் தகவல் ஒன்றைக்கூற வாய்ப்பு உண்டு.

**கடகம்:** காலையில் சற்றுக் குழப்பான நிலையே காணப்படும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை காலையிலேயே மேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகிடைக்கும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வெளியூரில் இருந்து வரும் செய்தி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்கும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். காரம் மற்றும் புளிப்பான உணவுகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக செலவுசெய்வீர்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மாலையில் மனதுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் பெரியவர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிற்பகலுக்குமேல் மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் சகவியாபாரிகளுடன் அனுசரணையாக நடந்துகொள்வது நல்லது.

**மீனம்:** இன்றைக்கு புதிய முயற்சிகள் சாதகமாகும். வழக்கமான பணிகளையும் குறித்த நேரத்துக்குள் முடித்துவிட்டு உற்சாகமாக இருப்பீர்கள். பிற்பகலுக்குமேல் உறவினர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்திகிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு ஏற்படும்.

# விழிப்புலனற்றோர் சங்க 49 ஆவது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், மே 23

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் 49ஆவது ஆண்டுவிழா அரியாலை புங்கன்குளம் வீதி, ஜே விருந்தகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.40 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் எஸ்.வை. சுதாகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

# வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 23

மிருசுவில் பழைய வாய்க்கால் புனித வேளாங்கன்னி அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 7 தினங்கள் நடைபெறவுள்ளன.

30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும், 31ஆம் திகதி காலை 7 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் இடம்பெற்று திருச்சொரூபப் பவணியும் நடைபெறும் என பங்குத் தந்தை எஸ்.ஜெ.கியூ. ஜெயரஞ்சன் அடிகளார் அறிவித்துள்ளார். (ச-25)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 23

ஏழாலை மேற்கு சித்தி விநாயகர் நூல் நிலையத்தின் 40 ஆவது நிறைவை முன்னிட்டு ஏழாலை எழுத்தாளர்களின் நூல்வெளியீட்டு வரிசையில், அமரர் சிவ.சண்முகவடிவேலின் 11ஆவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு அவரால் எழுதப்பட்ட 'புறநானூற்றுத் தமிழமுதம்' நூல் வெளியிடப்படவுள்ளது.

நூல் நிலையத்தின் தலைவர் மூ.வைத்திலிங்கத்தின் தலைமையில் ஏழாலை மேற்கு சறோஜினி பூங்காவில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமாரும், நயவுரையை நல்லூர்ப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சைவப்புலவர் கு.றஜீபனும், நினைவுரையை யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளர் சி.றமணராஜாவும் ஆற்றவுள்ளனர். (ச-25)

# செல்லப்பா சுவாமி குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 23

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அபிஷேகம், திருமுறை மற்றும் நற்சிந்தனை என்பனவற்றைத் தொடர்ந்து, திருமுறை பெருமை பற்றி கலைமாமணி, கலாபூசணம் சிவஸ்ரீ கதிர் குமாரசுவாமி சுமுகலிங்கக் குருக்கள் உரையாற்றவுள்ளார். (ச-25-66)

## சைவநெறிப் போட்டி

யாழ்ப்பாணம் அருள்மிகு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் திருக்கோவில் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு சைவநெறிப் போட்டி, கொட்டடி நமச்சிவாய வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமைகாலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

வெண்கரம் அமைப்பின் அனுசரணையில் கொட்டடி நமச்சிவாய வித்தியாலய இந்து மாமன்றம் மற்றும் கொட்டடிக் கல்வி அபிவிருத்திக்குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (ச-25)

# குருதிக்கொடை முகாம்



கொழும்பு, மே 23

அவசர குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும்வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான முகாம் வல்வெட்டித்துறை, நெடியகாடு பகுதியில் அமைந்துள்ள கணபதி மஹாலில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

வல்வை 1975 நட்புகள் அனுசரணையில் வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச்சங்கம் மற்றும் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்தக் குருதிக்கொடை முகாம் இடம்பெறவுள்ளது. பங்கேற்கும் குருதிக்கொடையாளர்களுக்கு அன்பளிப்புகளும் நினைவுச் சின்னமும் வழங்கப்படவுள்ளன. (ச-100-66)

# நீரிழிவு வழிகாட்டி நூல் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், மே 23

சுகாதார மேம்பாட்டை நோக்கிய பயணத்தில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் செல்லத்துரை பிரசாத் எழுதிய 'நீரிழிவு நோய்' பொதுமக்களுக்கான ஒரு வழிகாட்டி நூல் வெளியீடு பருத்தித்துறையிலுள்ள சூரிய மஹால் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பொது மருத்துவ நிபுணர் மருத்துவர் க.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் நூலை வெளியிட்டு வெளியீட்டுரையை நிகழ்த்தவுள்ளார். கிளிநொச்சி குமாரசாமிபுரம் அ.த.க. பாடசாலை அதிபர் மா.செல்வதாஸ் நூல் மதிப்பீட்டுரையை நிகழ்த்த தொடர்ந்து நூல் ஆசிரியர் பொது மருத்துவ நிபுணர் செல்லத்துரை பிரசாத் ஏற்புரை வழங்கவுள்ளார். (ச-100)

# முகாமைத்துவக் கற்கை விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 23

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் முயற்சியாண்மை மற்றும் சிறு வணிக முகாமைத்துவ உயர்தரச் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 16 வயதுக்கு மேற்பட்டவராகவும், கா.பொ.த சாதாரண தரத்தில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், முதலாம் மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு ஏதாவது இரு திறமைச் சித்திகள் காணப்படவேண்டும். விண்ணப்பப்படிவங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் யாழ்.பிராந்திய நிலையம், பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கமுடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 09 . 1945



மறைவு
19 . 05 . 2025

## தங்கலட்சுமி கோபாலகிருஷ்ணன்

அச்சுவேலி உலலிக்குளபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான தங்கலட்சுமி கோபாலகிருஷ்ணன் 19.05.2025 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணரின் பாசமிகு மனைவியும், தவரூபன் (கனடா), சசிகலா (லண்டன்), பாலரூபன் (லண்டன்), கலாரூபன் (பிரான்ஸ்), சிவரூபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மதிவதனி (கனடா), லோகா (லண்டன்), ராஜினி (பிரான்ஸ்), சுபாஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இராசலட்சுமி (அச்சுவேலி), நாகராசா (முத்தையன்கட்டு), பாலசிங்கம் (மன்னார்), Dr.சிவபாலசிங்கம் (அச்சுவேலி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.05.2025 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பயிந்தோலை,**
**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**தகவல் :**
**Dr.C.K.சிவபாலசிங்கம்**
**077 861 8834**

**காணி விற்பனைக்கு**

உசன் கஜகேணி பிள்ளையார் கோவில் வீதி, தொந்தியா வேட்டையில் பயன்தரும் தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்கு உண்டு.

**076 072 0341**

(CR/0066) J-1

# முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம்
02 . 11 . 1949



மறைவு
04 . 05 . 2024

**அமரர் தம்பிஐயா (பரராசசிங்கம்) சரஸ்வதி**

## செகராச சேகரப் பிள்ளையார் பாதங்களில் நீங்கள் என்றும் வீற்றிருக்க பிரார்த்திக்கின்றோம்

**இணுவில் மேற்கு,**
**செட்டி வளவு ஒழுங்கை**

(CS 3220) E-1

**குடும்பத்தினர்**

# கண்காட்சியும் சிறுவர் சந்தையும்

*யாழ்ப்பாணம், மே 23*

ஊரெழு கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த கல்விக் கண்காட்சியும் சிறுவர் சந்தையும் கலைவாணி முன்பள்ளியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன. நலன்விரும்பி சி.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக புன்னாலைக் கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய ஆசிரியர் க.குணநிதி, சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்ட இணைப்பாளர் ப.நாகேஸ்வரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ச-25)

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 06 . 1959



மறைவு
18 . 05 . 2025

## மீனலோசனி கந்தசாமி

**(தட்டெழுத்தாளார், சுருக்கெழுத்தாளர், மேல்நீதிமன்றம் - யாழ்ப்பாணம், வவுனியா)**

யாழ். கொக்குவில் (நந்தாவில்) பிறப்பிடமாகவும், அம்பாகர் பாதை, பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி. மீனலோசனி கந்தசாமி அவர்கள் கடந்த (18.05.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தசாமி – சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், பத்மலோஜனி(இலங்கை), சிவதாசன் (நோர்வே), சிவநேசன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2025) வெள்ளிக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் கிழக்கு இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**30/4, அம்பாகர் லேன்,**
**பிரம்படி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்**

(CS/58330) J-1

**தகவல்: குடும்பத்தினர்**
0047 979 892 94
077 886 7286

# மரண அறிவித்தல்

மலர்வு
25 . 01 . 1954



இறப்பு
22 . 05 . 2025

## வைத்திலிங்கம் சிவராஜா

**(டிக்கெட் பரிசோதகர் - இலங்கை போக்குவரத்து சபை)**

மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும், சரசாலை தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவராஜா அவர்கள் நேற்று (22.05.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - கண்மணி தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம் - தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற சத்தியபாமாவின் பாசமிகு கணவரும், விஜித்தன், சைலஜா, விஜிமோகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதிவதனி, இன்பகரன், நிதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிந்துஜன், ஹரணிகா, லிந்துஜன், ஆதவன், அனிருத், ஆகியோரின் பாசமிகு பேரனும், கமலாதோவியின் பாசமிகு சகோதரரும், ஏரம்பமூர்த்தி, காலஞ்சென்ற தர்மகுலசேகரம், காலஞ்சென்ற பஞ்சரத்தினம், சத்தியராணி, பத்மாவதி, சத்தியசீலன், சூரியகுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2025) வெள்ளிக்கிழமை 12:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**விஜித்தன் +1 (437) 995 9989**
**சைலஜா 077 117 7802**
**விஜிமோகன் 077 774 0306**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS/58334) D-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் இளைஞர் ஒருவர் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுத் தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், அந்த இளைஞனை ஹெரோய்னுடன் கைது செய்தனர். அவரிடம் இருந்து 40 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது.

(ம-125)

**முதியோர்/ நோயாளர்/ பராமரிப்பு சேவை**

**யாழ் அரியாலை கண்டிவீதியில் இயங்கும் பராமரிப்பு நிலையத்தில் படுக்கை நோயாளிகள்/ டிமென்ஸியா/ படுக்கைபுண் சகல வகையான நோயாளிகளும் விசேடவைத்திர்களின் கண்காணிப்பில் சேவை வழுங்குகிறோம்.**

077 712 6860, 076 252 5725, 77 712 6859

### சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம்-2025


சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 10.06.2025 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெறும். யாப்பின் உறுப்புரை 05.09 இற்கமைய 31.01.2025 இற்கு முன்னர் உறுப்புரிமை பெற்றோரும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோருமே இக்கூட்டத்தில் கலந்து கொள்ள உரித்துடையோராவர்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 30.05.2025 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

த.தவரூபன்
செயலாளர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 11 12 1938

மறைவு 19 05 2025

### திரு. சுப்பிரமணியம் சிவதாசன்

(SLAS, ஓய்வுபெற்ற அமைச்சக செயலாளர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஆலோசகர்)

யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கொழும்பு, California ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவதாசன் அவர்கள் **19-05-2025** திங்கட்கிழமை அன்று **California**-வில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான "கடவுள்" சுப்பிரமணியம் ரத்தினம் தம்பதிகளின் பாசமிகு இளைய மகனும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோஜினி அவர்களின் பாசமிகு கணவரும்,அரிச்சந்திரன் (ஹரி), அரவிந்தன் (விந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்ஷினி அவர்களின் பாசமிகு மாமனாரும், நிஷா, அனுஷன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவனேசன், திலகவதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கதிர்வேலாயுதப்பிள்ளை, ரோகினி, சிவநாதன், சித்ரா, நிமலநாதன், காலஞ்சென்ற ராஜராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr.யசோ, மேனகை, கமலினி, சுகந்தன், Dr.சிவாஜினி ஆகியோரின் பாசமிகு மாமாவும், சிவப்பிரியா, சிவரம்யா, மயூரன், காலஞ்சென்ற மீரா, Dr.ரஜன், Dr.சாய் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்:

**Place: Fremont Memorial Chapel, 3723 Peralta Blvd, Fremont, CA 94536**
**Viewing: Sunday, May 25, 9:30 am to 11:00 am**
**Rituals: 11:00 am to 12:30 pm.**
**Cremation: Irvington Memorial Crematory, 41001 Chapel Way, Fremont 94538 at 1:00 pm**

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**Contacts:**
**Vinthan: +1 510 579 8632 / Harry: +1 510 789 3408**

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாக மோசடி:

# பணத்தை மீளச் செலுத்தியதால் பொலிஸ் அதிகாரி விடுவிப்பு!

## மரண அறிவித்தல்



### சந்திரராசா விதுஜாம்பாள்

**துர்க்காபுரம் மல்லாகத்தினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி சந்திரராசா விதுஜாம்பாள் அவர்கள் (21.05.2025) அன்று இறைபதம் எய்திவிட்டார். அன்னாரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

தகவல்,
குடும்பத்தினர்.
077 959 0729

(CS3229) D

யாழ்ப்பாணம், மே 23

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி மோசடியில் ஈடுபட்ட பொலிஸ் அலுவலர் ஒருவர், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் பணத்தை மீள வழக்கியதைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் விசேட படையணியில் பணியாற்றிய, பொலனறுவைப் பகுதியைச் சேர்ந்த அந்தப் பொலிஸ் அலுவலர், சக பொலிஸ் அலுவலரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பெருந்தொகை பணத்தை மோசடி செய்திருந்தார்.

மற்றைய பொலிஸ் அலுவலரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய அவர் அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போது, விளக்கமறியலில் இருந்த பொலிஸ் அலுவலர் பணத்தை மீளச் செலுத்தியதைத் தொடர்ந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

(ம-125)

## மல்லாவி ம.கல்லூரி வைரவிழா இன்று


முல்லைத்தீவு, மே 23

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் வைரவிழா, கல்லூரி முதல்வர் து.யேசுதானந்தர் தலைமையில் கல்லூரியின் இந்திரவதனி கலையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், தமிழ் மற்றும் பெருந்தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை கல்விப் பணிப்பாளர் ச.பிரணவதாசன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் க.பிறட்லி ஜெனாட், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சேதுரட்ணம், விசேட விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடபீடாதிபதி பேராசிரியர் வேல்நம்பி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-25)

## 31ம் நாள் நினைவஞ்சலி



கடந்த 23.04.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அம்மா

### அமரர். சகுந்தலாதேவி தனபாலசிங்கம் (ராசதேவி)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.05.2025) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

கோவில் வீதி,
நல்லூர்

இங்ஙனம்,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் தடையின்றி சட்டவிரோத கடலட்டைத் தொழில்

## அநுர ஆட்சியிலும் ஊழல் வர்ணகுலசிங்கம் காட்டம்



**யாழ்ப்பாணம், மே 23**

**தடைசெய்யப்பட்ட கடலட்டைத் தொழில் நடவடிக்கை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றது. புதிதாக 310 படகுகளுக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது. ஊழலுக்கு எதிரானதாகச் சொல்லும் என்.பி.பி. ஆட்சியிலும் இலஞ்சம் தலைவிரித்தாடுகின்றது என்று வடமாகாணக் கடற்றொழில் இணையத்தின் பிரதிநிதி நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

யாழ்.வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் குறிப்பாக வடமராட்சிப் பகுதிகளில் கடலட்டை பிடிக்க அனுமதிவழங்கக்கூடாது என நாம் குரல்கொடுத்துவருகின்றோம். இந்தநிலையில் 310 படகுகளுக்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

கடலட்டை பிடிப்பதற்காக 310 படகு களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளநிலையில் ஏற்கனவே 600 வரையான படகுகள் கடலட்டைப் பிடியில் ஈடுபடுகின்றன. ஊழலற்ற கட்சி, அரசு எனக் கூறிக் கொண்டுவந்த அநுர அரசாங்கத்திலும் தொழில்களுக்கு இலஞ்சம் வாங்கிக்கொண்டு அனுமதியளிக்கிறது அமைச்சு. நாடாளுமன்றில் விவசாயம், குளங்கள், வீதிகள் பற்றி பேசும் கடற்றொழில் அமைச்சர் கடற்றொழில் பற்றிப் பேசவே இல்லை - என்றார். (ச-100)

# அச்சங்குளம் பகுதியில் சிப்பாய் சடலமாக மீட்பு

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அச்சங்குளம் கடற்கரைப் பகுதியில் 37 வயதுடைய கடற்படைச் சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அந்தச் சிப்பாய் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-56)

அகில இலங்கை இளங்கோ கழகம்
புலமை ஒலி - 2025
சிலப்பதிகார விழா

தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் அரங்கு
23.05.2025 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணி

திருமதி வசந்தகுமாரி கதிரவேற்பிள்ளை அவர்களால் நிறுவப்பட்ட கலைஞான சேகரி க.பரஞ்சோதி ஞாபகார்த்த புலமை ஒலி உயர் விருது பெறுபவர் பேராசிரியர். அ.சண்முகதாஸ்

விநாயகம் கிருஷ்ணகாந்தன் அவர்களால் நிறுவப்பட்ட வீரகத்திப்பிள்ளை விநாயகம் ஞாபகார்த்த கல்விப்பணிக்கான உயர் விருது பெறுபவர் திரு.சின்னையா சிவராசா (ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்) (வடக்கு கிழக்கு மாகாணம்)

வேலுப்பிள்ளை மனோகரன் அவர்களால் நிறுவப்பட்ட இலக்கியப் பணிக்கான உயர் விருது பெறுபவர் கலைவாரிதி புலோலியூர் செ.கந்தசாமி (மூத்த சிறுகதை ஆசிரியர்)

வரவேற்பு நடனம்
கி.துஷானிகா, சி.அபிசன்யா, உ.விதுர்ஷிகா, கோ.ரதீஷனா, த.சர்மிகா,
(நெறியாள்கை, நாட்டியத்திலகம் திருமதி. கனிதா ஞானதயாளன்)

மங்கல விளக்கேற்றல்
திரு. திருமதி சுகுமாரன் அன்புமலர் தம்பதிகள்
திரு. திருமதி விஷ்வப்பிரம்மஸ்ரீ கலாநிதி கோபாலகிருஷ்ணன் காயத்திரி தம்பதிகள்

கடவுள் வாழ்த்து
செல்வி தர்சிகா கிருஷ்ணாகரன்

கழகக்கீதம்

ஆசியுரை
கவிதாசிரோமணி சிவசக்திஸ்ரீ கலாநிதி ராம்தேவலோகேஷ்வரக்குருக்கள்
(ஸ்ரீ சாரதாபீடம், துன்னாலை)

வாழ்த்துரை
திருமதி. கிருஷ்ணலதா குலசங்கர்
(அதிபர் யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

வரவேற்புரை
திரு. ம. பகீரதன்

தலைமையுரை
திரு. இ. இராஜேஸ்கண்ணன்
(முதுநிலை விரிவுரையாளர், சமூகவியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

தொடக்கவுரை
திரு. த. அஜந்தகுமார் (விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்)

கௌரவிப்புரை
திரு.சி.இலம்போதரன்


நன்றியுரை
செல்வன். செ. சரண்

விவாத அரங்கு
நடுவர் : திருமதி. கோசலை மதன்
(தலைவர், சட்டத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
"எமது தேசத்தை கட்டியெழுப்ப பெரிதும் தேவையானது"
உயர்ந்த அறமே: அ.யூ.செ.லெம்பேட், த.குருபரன்
தெளிந்த அறிவே: சு.இமயராஜ், சு.பிரகான்

பட்டிமண்டபம்
"இளங்கோவடிகள் தன் காப்பியத்தினுள் பெரிதும் வலியுறுத்தும் பாவிகச் செய்தி"
நடுவர் : கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்
"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"
வலம்புரி ந.விஜயசுந்தரம், ச.அன்ரனி
"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்"
செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன், க.வாணிமுகுந்தன்
"ஊழ்வினை உடுத்து வந்து ஊட்டும்"
பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன், சி.குமரேசன்

விளம்பர அனுசரணை
ஸ்ரீகுமரன் நகைமாளிகை
நெல்லியடி

# வீதிப் பாதுகாப்பு கலந்துரையாடல்



கிளிநொச்சி, மே 23

கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அட்தியட்சகர் தலைமையில் வீதிப் பாதுகாப்புத் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், போக்குவரத்துப் பொலிஸார், மாவட்டத்திலுள்ள திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், முச்சக்கரவண்டிச் சங்கப் பிரதிநிதிகள், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-113)



# தொழில் முயற்சியாளருக்கு வங்கிக்கடன் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், மே 23

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட தொழில் முயற்சியாளருக்கான நிதி சார்ந்த மற்றும் வங்கிக்கடன் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கைத்தொழில் அமைச்சின் என்.இ.டி.ஏ அனுசரணையுடன் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அரச, தனியார் மற்றும் சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள் பங்குபற்றினர். (ச-41-27)



# மன்னார் இராணுவத்தினால் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

மன்னார், மே 23

மன்னார் இராணுவம் 542 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில், கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி மன்னார் மாவட்ட பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. மன்னார்,நானாட்டான்,முசலி,மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட அணிகள், இராணுவத்தின் இரு அணிகள் உள்ளடங்கலாக ஏழு அணிகள் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

தொடர்ச்சியாக இடம்பெறவுள்ள குறித்த போட்டியின் இறுதி நிகழ்வு அடுத்தமாதம் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ச-25,56)



# போதைத் தடுப்பு மாநாடு; ஈழத்தமிழர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், மே 23

சிங்கப்பூரில் இடம்பெற்ற போதைப்பொருள்பாவனைக்கு எதிரான ஆசிய பசுபிக் மாநாட்டில் இலங்கையிலிருந்து தமிழர் ஒருவர் பங்கேற்றுள்ளார். வடக்கு மாகாணசபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் தவராசாவின் மகனான பிரமேஸ் என்பவரே இவ்வாறு பங்கேற்றார்.

இந்த மாநாடு இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25.27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரந்தனில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 24

முல்லைத்தீவு - பரந்தன் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

வீதியில் படுத்திருந்த மாட்டுடன் மோட்டார்சைக்கிள் ஒன்று மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. கம்பளையைச் சேர்ந்த பிசிர விஜரட்ன (வயது-45) என்பவரே உயிரிழந்தவராவார். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். (ம-125)

## 'சிரஞ்சீவி' சஞ்சிகை வெளியீட்டு விழா

'சிரஞ்சீவி' சஞ்சிகை வெளியீட்டு விழா யாழ்ப்பாணம்பலாலிவீதி, ஊரெழுகிழக்கில் அமைந்துள்ள பூரண நிலையத்தில் நாளைசனிக்கிழமைகாலை9மணிக்கு நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர் ந.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சஞ்சிகை ஆய்வாளராக வலம்புரி நாளிதழ் பிரதம ஆசிரியர்ந.விஜயசுந்தரம்ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25)

### உப்பை...

அனுப்ப வேண்டாம் என்று கூறுகின்றனர். அர்ச்சுனாவும் குழப்பம் ஏற்படுத்தினார்.

வடக்கு உப்பு, தெற்கு உப்பு என உப்பு இல்லை. நாட்டின் உப்புதான் உள்ளது. உங்களுக்கு வடக்கு உப்பு, தெற்கு உப்பு என இருந்திருந்தால் அதை அந்தக் காலத்தில் வைத்துக்கொள்ளுங்கள். தற்போது அது இல்லை. முழு நாட்டையும் ஐக்கியப்படுத்தியுள்ளோம். தற்போது உப்பை வைத்தும் அரசியல் நடத்துகின்றனர். அப்படியாவது உப்புத் தொழில் துறை பற்றி கருத்தாடல் உருவாகி இருப்பது மகிழ்ச்சி. இறக்குமதி செய்யப்பட்ட உப்பு துறைமுகத்துக்கு வந்துவிட்டது. ஓரிரு நாட்களுக்குள் கடைகளுக்கும் வந்துவிடும் என்றார்.

இதன் பின்னர் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தெரிவித்ததாவது:

பிரபாகரனின் உப்பு எனவும், அதைத் தெற்குக்கு கொண்டுசெல்ல வேண்டாம் எனவும் நான் கூறியதாக அமைச்சர் ஹெந்துன்நெத்தி கூறியுள்ளார். அவ்வாறான கருத்துக்களை நான் ஒருபோதும் வெளிப்படுத்தவில்லை. மக்களின் தொழில்வாய்ப்பு உறுதிப்படுத்தப்படும் என்றே நான் அங்கு சென்று தெரிவித்தேன்-என்றார். (அ-ம-44)

### நட்டநடுவீதியில்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்த 22 வயது யுவதியும், பூநகரி கௌதாரிமுனை பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞனும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்துள்ளனர். பெண்வீட்டாருக்குப்பயந்து இருவரும் தலைமறைவாக இருந்துள்ளனர். பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இளவாலை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளனர். இதன்போது அங்கு வந்த பெண் வீட்டார் குறித்த யுவதியைப் பிரிப்பதற்கு முயற்சித்துள்ளனர். இருவருக்கும்18 வயது நிறைவடைந்ததாலும், இருவரும் பிரிவதற்கு விரும்பாத காரணத்தாலும் அவர்களைப் பிரிக்க முடியாது என்று இளவாலைப் பொலிஸார் யுவதியின் குடும்பத்தினருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பின்னர் பெண் வீட்டாரின் கட்டாயத்தின் பேரில் இந்த விடயம் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் இருவருக்கும் திருமண வயது வந்துள்ளதால், அவர்கள் இருவரும் தாராளமாகச் சேர்ந்து வாழலாம் என்று தீர்ப்பளித்துள்ளது.

வழக்கு முடிவடைந்து செல்லும்போது, மாலை 4.30 மணியளவில் அந்த யுவதியை குழுவொன்று கடத்திச் சென்றுள்ளது. இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸாரிடம் முறையிட்ட நிலையில், பொலிஸார் யுவதியைத் தேடி வருகின்றனர். யுவதியின் காதலன் மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், அவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-27)

### மயங்கிக்...

இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இதயம் செயலிழந்ததால் இறப்புச் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்குத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

### விபத்தில்...

(வயது-71) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மோட்டார்சைக்கிளில் பயணித்த அந்த முதியவர், சாவகச்சேரி பிரதேசசபைக்கு அருகாக உள்ள சிமெந்துக் கட்டுமானம் ஒன்றுடன், கடந்த 11ஆம் திகதி மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளார். இதன்போது படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சையின்போது நேற்றுக் காலை உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### பொருளாதாரப்...

என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை தீவிரமாகி வருகின்றது. ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. பல பிரபல ஆடைத் தொழில்முனைவோர் சத்தமில்லாமல் தங்களின் தொழிற்சாலைகளை அயல்நாடுகளுக்குக் கொண்டு செல்கின்றனர். உள்நாட்டில் வேலையின்மை குறைகிறது. வேலையில்லா நிலைமை அதிகரிக்கின்றது. இதற்கிடையே மின்சாரக் கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது. '2024ஆம் ஆண்டு இலாபம் காட்டிய மின்சார சபை, அதற்கிடையில் எவ்வாறு இழப்பைச் சந்தித்தது?' என்று கேட்டால் பதில்சொல்ல ஆளில்லை.

ட்ரம்ப் நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம் என்றனர். ஆனால், ஏற்றுமதித் துறைசார் ஆடை தொழிற்சாலையொன்று 1,400 க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை நீக்கிவிட்டது. ஆடைத்துறையில் இவ்வாறான வீழ்ச்சிகள் பதிவாகின்றன. இது ட்ரம்ப் அறிவித்த வரி விதிப்பின் தாக்கங்கள்தான். அரசாங்கத்தினர் 'எதிர்க்கட்சி மனோநிலையில்' இருந்தே செயற்படுகின்றனர். திருடர்களைப் பிடிக்கிறோம், என்று சொல்லிச் சொல்லியே காலத்தை ஓட்டுகின்றனர். திருடர்களைப் பிடிப்பது நல்ல விடயம்தான். ஆனால், அது மட்டும் தான் அரசாங்கத்தின் பணியல்ல - என்றார். (அ-ம-44)

### காட்டுப்பாதை...

கதிர்காமக் கந்தன் ஆலயம் நோக்கிய பாதயாத்திரைக்கான காட்டுவழிப்பாதை ஜூன் மாதம் 20ஆம் திகதி திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை குறித்த பாதை மீண்டும் மூடப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

### கடற்படையினர்...

நேற்று மாலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவு - செல்வபுரம் கடற்கரையில், கடலோரக் கண்காணிப்புக் கடற்படையின் முகாம் அமைந்துள்ளது. அந்த முகாமில் கொட்டப்பட்ட குப்பைகளுக்கு வைக்கப்பட்ட தீயே அதி விரைவாகப் பரவி மீனவரின் வாடியொன்றை முற்றாக எரித்துச் சாம்பராக்கியுள்ளது. அத்துடன் பல பனை மரங்களும் தீக்கிரையாகியுள்ளன. காற்றால் பனைமரங்களில் இருந்து பறந்துசென்ற தீப்பிளம்புகள் ஏனைய மீனவர்களின் வாடிகள் மீதும் விழுந்துள்ளன. எனினும், இளைஞர்களின் துரித செயற்பாட்டால் அவை அணைக்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

### கொழும்பு...

அமைச்சர் லால்காந்த மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு மாநகரில் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மைப் பலத்தை உறுதிப்படுத்திவிட்டோம். அதிகாரபூர்வமற்ற வகையில் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. அதனை அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டிய வேலை மட்டும்தான் உள்ளது. எமது மேயர் பதவியேற்கத் தயாராக உள்ளார் - என்றார். (அ-ம-44)

### கொழும்பு மாநகரில்...

கொழும்பு மாநகரசபை தொடர்பில் அனைத்துக் கட்சிகளுடன் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்படுகின்றோம். பல கட்சிகள் எங்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளன. எனவே, கொழும்பில் ஆட்சியை அரசாங்கம் இழக்கும்.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்த சில சுயாதீனக் குழுக்கள் எம்மையும் சந்தித்துள்ளன. எனவே, ஐக்கிய மக்கள்சக்திதலைமையிலேயேகொழும்பு மாநகரசபையில் ஆட்சி அமையும். ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவரே மேயர் வேட்பாளராக நிறுத்தப்படுவார். ஏனைய கட்சிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். உரிய வகையில் சரியான முடிவு எடுக்கப்படும் என்றார். (அ-ம-44)

### இனப்படுகொலைகள்...

இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றார். இந்த விடயம் தொடர்பில் உதயனுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே சிறிதுங்க ஜயசூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனவாத ராஜபக்ச அரசாங்கத்துக்கும், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் இடையில் எவ்வித வேறுபாடும் இல்லை. தேசிய மக்கள் சக்தியினர் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர். மஹிந்த ராஜபக்ச முன்னெடுத்த இனவாத வேலைத்திட்டமே தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு தேசிய மக்கள் சக்தி எதிர்ப்பு தெரிவித்தமை இதற்குச் சிறந்த சான்றாகும். மஹிந்த மற்றும் ரணில் அரசுகளும் இதையே செய்தன. தமிழ் மக்களை ஏமாற்றும் கீழ்த்தரமான அரசியல் இவர்களால் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டில் இனப்படுகொலை நடந்துள்ளது என்பதை நடுநிலையானவர்கள் ஏற்கின்றனர். சில தாராளவாதிகள்கூட அதை ஏற்கின்றனர். இவர்கள் (தேசிய மக்கள் சக்தி) அதை ஏற்கமறுப்பது அவர்களின் இனவாத முகத்தையே வெளிப்படுத்துகின்றது. உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு, கிழக்கில் சிறந்த பாடம் புகட்டப்பட்டது-என்றார். (அ-ம-44)

### கனேடிய...

ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதியன்று இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றன. கனடாவில் இருந்து வருகைதந்து தமது வீட்டைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டவர்கள் மீதே இந்தக் கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு கடந்த இரண்டு வருடங்களாக இடம்பெற்றுவந்த நிலையில், தாக்குதலுக்குத் திட்டமிட்ட பிரதான சந்தேகநபர் கனடாவின் ஒன்றாரியோவைச் சேர்ந்தவர் என்றும், அவர் ஆலயமொன்றின் முன்னாள் தலைவர் என்றும் பொலிஸார் அறிக்கையிட்டிருந்தனர். சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதிமன்றம் அந்த நபருக்கு எதிராகத் திறந்த பிடியாணையைப் பிறப்பித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டால், நீதிமன்றத்தின் ஊடாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எச்சரிக்கையாகவும் இந்தத் தீர்ப்புப் பார்க்கப்படுகின்றது. பிடியாணை பிறப்பிக்கப்பட்டவரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குஜராத்தை நேற்று வீழ்த்தியது லக்னோ

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் குஜராத்தைத் தோற்கடித்தது லக்னோ. இந்தத் தோல்வியைத் தொடர்ந்து, பிளேஓவ் சுற்றின் தகுதியாட்டத்தில் விளையாடும் வாய்ப்பை இழக்கும் அபாயம் குஜராத்துக்கு ஏற்பட்டுள்ளது.**

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக மிச்செல் மார்ஷ் 117 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணி 9 விக்கெட்களை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்று 33 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக் சாருக் கான் 57 ஓட்டங்களைப் பெற்றார்.

தற்போது குஜராத் அணி நேற்றைய ஆட்டத்தில் வெற்றிபெற்றிருந்தால் தகுதியாட்டத்தில் விளையாடுவதை உறுதிப்படுத்தியிருக்க முடியும். ஆனால், தற்போது புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் இருந்தாலும் ஏனைய ஆட்டங்களின் நிலையைப் பொறுத்து குஜராத்தின் தரப்படுத்தல் மாறலாம். ஆதலால், அந்த அணி தகுதியாட்டத்தில் விளையாடும் வாய்ப்பையும் இழக்க வேண்டி ஏற்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## விற்பனைக்கு

யாழ் பிறவுன் வீதியில் நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பிறவுன் வீதி முகப்புடன் 6½ பரப்பு, 3½ பரப்பு, 2 பரப்பு காணித் துண்டுகள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 074 123 9947

(CS/32228) D*

## தேர்த்திருவிழா

கற்பகப்பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும். நாளை சனிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழா நடைபெறும். (ச-25, 17)

## மணமகள் தேவை

யாழ் இந்து 1990 ஆண்டு பிறந்த ரோகினி நட்சத்திரமுடைய செவ்வாய் குற்றமில்லாத பாவம் 16 உள்ள 5' 11" உயரமுடைய கனடாவில் றோயல் வங்கியில் சொப்பையர் பொறியியளராக பணிபுரியும் கனடா பிரயாவுரிமையுடைய மணமகனுக்கு கனடாவிலுள்ளவர்களோ வேறு வெளிநாட்டிலுள்ளவர்களும் சரி தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 077 976 1221



# காணி அனுமதிப்பத்திரம் மன்னாரில் கையளிப்பு

மன்னார், மே 22

மன்னார் திருக்கேதீஸ்வரம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாந்தை கிராமத்தில் வசிக்கும் 27 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வானது மன்னார் நகர பிரதேச செயலாளர் ம. பிரதீப் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) மா. சிறிஸ்கந்தராஜா உள்ளிட்ட பிரதேச செயலக காணி உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர், கிராமமட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25, 213,56)

## PUBLIC NOTICE
## The American Ceylon Mission Official Statement to the Public

This is to notify all concerned parties that all movable and immovable properties, including all bank accounts (Savings, Current, Fixed Deposits and other types of deposits and investments) that were purchased, registered, deposited or opened under the name of "American Ceylon Mission," "The American Ceylon Mission" (as per the American Ceylon Mission Ordinance No. 4 of 1908, by the parliament of Sri Lanka), "ACM," or any variation thereof or in combination with other names used by the officers of the American Ceylon Mission since 1816 and those officers who were duly appointed by the "American Board of Commissioners for Foreign Missions" (ABCFM) since the ordinance in 1908, and by the successor bodies of the ABCFM, the "United Church Board for World Ministries" (UCBWM), and the current successor, the Wider Church Ministries (WCM) of the United Church of Christ, solely belong to the American Ceylon Mission. No individual or entity is authorized to claim ownership of these assets or assume control over these properties and all bank accounts.

The following officers, duly appointed by the Wider Church Ministries (WCM), are the current legal representatives of the American Ceylon Mission and are entrusted with the responsibility to manage, operate, and safeguard these assets:

Rev. Arulanantham Samuel Thevagunananthan - President

Mr. Navanesarajah Kingsley Rameshkumar - Treasurer

Rev. Ambalavanar Buvanasundarararajah Thevathas - Secretary

Should you require any clarifications or have inquiries, kindly direct your correspondence by writing to:

The Treasurer
The American Ceylon Mission
Asia House
Maruthanarmadam, Chunnakam
Sri Lanka.

Rev. A. S. Thevagunananthan, President — Mr. N. K. Rameshkumar, Treasurer — Rev. A. B. Thevathas, Secretary

(CS/58331) J-1

## வேலையாட்கள் தேவை

கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

- Labor
- Assistance Factory Manager
- Supervisor

தங்குமிடம், உணவு வழங்கப்படும். முன் அனுபவம் அவசியமில்லை. விருப்பமுடையவர்கள் தொடர்பு கொள்ளவும்.

Whatsapp only:
077 777 9448

## வேலையாட்கள் தேவை

வீட்டில் தங்கிநின்று வீட்டு வேலை செய்யக்கூடிய பெண்கள் தேவை.

இடம் கொழும்பு-கொட்டாஞ்சேனை மற்றும் யாழ்ப்பாணம்-நிலாவரை

கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 774 3578

## வேலையாட்கள் தேவை

கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள ISO தரத்தின் கீழ் இயங்கும் தொழிற்சாலை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

- HR Manager (Human resource related degree)
- Lab chemistry (BSc in Chemistry, Biochemistry, Food science or Industrial chemistry)

தங்குமிடம், உணவு வழங்கப்படும். முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

Email: venkadeswaraagroindustry@gmail.com
Whatsapp 077 777 9448, 077 777 1457

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 — news@uthayan.com — விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org